முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

வார இதழ்

முரசு 5 | 5—9—58 | வெள்ளி | ஒலி 18

திசை மாறிச் சுற்றாதீர்!
வசை மாரி பொழியாதீர்!

கார்ட்டூன் **குட்டி சந்திரன்கள்!**

மேலே கண்ட கேலிச் சித்திரத்தை வெளியிட்டு, "தினத்தந்தி" ஏடு, அதன் கீழே "தமிழ்நாட்டு அரசியல் வானில் "சுதந்திரத் தமிழ் நாடு" என்ற நோக்கத்திற்காக இரண்டு தலைவர்கள் (ஈ. வெ. ரா. பெரியார், ஆதித்தனார்) கிளம்பி இருக்கிறார்கள்." என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

உண்மைதான்!

★ "திராவிடநாடு கிடைக்காது என்பதால் தமிழ்நாடு கேட்கிறோம்" என்கிறார் பெரியார்.

"திராவிடநாடு கூடாது — ஆகையால் தமிழ்நாடு மட்டுமே தேவை!" என்கிறார் ஆதித்தன்.

●

★ "தமிழ்நாடு கிடைத்தால் பார்ப்பனர் வெளியேற்றப்படுவார்கள்" என்கிறார் பெரியார்.

அதை ஒப்புக் கொண்டதாக ஜாடை காட்டவும் மறுக்கிறார் ஆதித்தன்.

★ "தமிழ்நாடு பெற சட்டசபைக்குச் செல்வதால் லாபமில்லை" என்கிறார் பெரியார்.

"சட்டசபை உறுப்பினராயிருக்கிறார் ஆதித்தன்"

●

★ திராவிடர் கழகமெனப் பெயர் சூட்டியிருக்கிறார் பெரியார்.

"திராவிடம்" என்பதே "தீராத விடம்" என்கிறார் ஆதித்தன்.

●

★ "சுதந்திரத் தமிழ்நாடு கோரிக்கைக்கு நானே வித்து" என்கிறார் பெரியார்.

"இல்லை—நானே வழிகாட்டி!" என்கிறார் ஆதித்தன்.

இந்த முரண்பாடுகள்

விளக்கப்படுவது போலவேதான் சித்திரத்தில் உள்ள "குட்டிச் சந்திரன்" ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையை நோக்கிச் சுற்றுகின்றன!

"திராவிடநாடு திராவிடருக்கே!" எனும் உண்மைச் சந்திரன், இந்த தினத்தந்தி சந்திரன்களைப் பார்த்து "அந்தோ பரிதாபம்!" எனக் கூறி விட்டுத் தன் கடமையைச் செய்வதில் வழக்கம்போல் முனைந்திருக்கிறது.

மனிதனின் கதை

பி.சி.கணேசன்

4 பண்டைய நாகரிகங்கள்

அன்புள்ள மாதவி,

நம் தாய்த்திரு நாடாம் தமிழகம்தான் மனித இனத்தைத் தோற்றுவித்து, நாகரிக வாசனையை நானிலமெங்கும் பரப்பக் காரணமாயிருந்தது என்பதை சென்ற கடிதத்தில் எழுதியிருந்தேன். ஆறுயிரம் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நைல் நதிப் பள்ளத்தாக்கிலும் (எகிப்து), யூப்ரடிஸ், டைகிரிஸ் நதிகளைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் (ஈராக், ஈரான் அல்லது பாரசிகம்) உயர்வானதொரு நாகரிகம் இருந்திருக்கிறது. நைல் நதிப் பள்ளத்தாக்கு இப்பொழுதிருப்பதைவிட அப்போது மிகவும் செழிப்புள்ள பிரதேசமாக விளங்கியது. பாரசிகத்தில் சுமேரியர்கள் அழகான நகரங்களை அமைத்துக் கொண்டு ஆட்சி செய்தார்கள். பெரிய எடுப்பான மூக்கும் பழுப்பு நிறமும் கொண்ட சுமேரியர்கள் திராவிட மக்களைப் போலவே நாகரிகத்தில் சிறந்து விளங்கினார்கள். செம்பாலான பாத்திரங்களையும் கருவிகளையும் உபயோகித்தார்கள். சுட்ட செங்கற்களால் அழகான கட்டிடங்களை எழுப்பினார்கள். ஆட்டு ரோமத்தால் ஆடை நெய்து உடுத்திக் கொண்டார்கள். தலையை வழுக்கையாக மொட்டையடித்துக் கொண்டார்கள். சுமேரியர்களுடைய ஒவ்வொரு நகரமும் ஒரு தனி அரசாட்சியாக விளங்கியது. ஒரு தனி நாடாகவே கருதப்பட்டது. இப்படித் தனி நாடாக விளங்கிய ஒவ்வொரு நகரத்திற்கும் அந்நகருக்கென்றே ஒரு கடவுள் அல்லது தேவதை இருந்தது. ஒவ்வொரு நகருக்கும் தனியாக ஒரு மத குருவும் இருந்தார். அந்த மத குரு மிகவும் சக்தி வாய்ந்தவராகக் கருதப்பட்டார். சுமேரியர்கள் அந்தக் காலத்திலேயே பேசும் மொழியை எழுத்தில் எழுதும் அளவுக்குத் தங்களுடைய மொழியை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். ஈரமான களிமண்ணிலே கோல்கொண்டு எழுதினார்கள். ஆனால் எகிப்தியர்கள் தங்களுடைய எண்ணங்களைப் படங்களாக சுவர்களில் எழுதித் தெரிவித்தார்கள். அதோடு நாணல், மூங்கில் ஆகியவற்றின் பட்டைகளில் எழுதும் பழக்கத்தையும் எகிப்தியர்கள் அறிந்திருந்தார்கள். தமிழகத்தில் பனை ஓலைகளில் பண்டை நாட்களில் மக்கள் எழுதும் பழக்கத்தை மேற்கொண்டிருந்ததும் இங்கு நினைவு கூரத் தக்கது. சுமேரியருடைய எழுத்துக்கள் நீண்ட முக்கோண வடிவ எழுத்துக்களாக இருந்தன. எகிப்தியர்களோ பொருள்களின் வடிவங்களையே வரைந்து சொற்களையும் ஓசைகளையும் குறிப்பிட்டார்கள்.

பேசும் மொழியை வடிவத்தில் மனிதன் எழுத ஆரம்பித்தது, அவனுடைய சமுதாய வளர்ச்சியில் மிக முக்கியமான கட்டமாகும். வாய் வார்த்தையாகச் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எழுத்திலே பதிவாகி அவனைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது. சட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் எழுதி, அமுல் செய்து, நிர்வாகம் செய்வது சாத்தியமாயிற்று. சிறிய நகர அரசாட்சிகள் பெரிய அரசாங்கங்களாக வளர்ந்தபோது, அதைக் கட்டுப்படுத்தி ஆளுவது சுலபமாயிற்று. ஆட்சி செய்வோன் தலைநகரில் இருந்து கொண்டே தூரப் பிரதேசங்களுக்கு எழுத்தின் மூலமாக ஆணைகள் அனுப்ப முடிந்தது. பழங்காலச் சமுதாய வாழ்க்கை முறை, அரசியல் வழி ஆகியவற்றை எதிர்காலச் சந்ததிகள் உணரவும், தனது சரித்திர பாரம்பரியத்தை ஒவ்வொரு தலைமுறையும் உணர்ந்து சமுதாயத்தில் வரலாற்றுணர்வு தோன்றவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அந்தக் காலத்தில் சுமேரியர்களிடமோ எகிப்தியர்களிடமோ நாணயச் செலாவணி முறை அமுலிலிருந்ததற்கு ஆதாரங்கள் ஏதும் இல்லை. பரிவர்த்தனை, வியாபாரமெல்லாம் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றன. ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு இன்னொரு பொருளை வாங்கும் முறைதான் இப்பொழுதும் நமது நாட்டில் சில இடங்களில் இருக்கிறதே; அங்காடிக் கடைகளில் நெல்லைப் பெற்றுக் கொண்டு பொருட்களை விற்பதும், பழைய துணிகளைக் கொடுத்து பாத்திரம் வாங்குவதும் பண்டமாற்றும் முறையே.

சுமேரியர்களுடைய சமுதாய வாழ்க்கையோ ஆலயங்களையே மையமாகக் கொண்டு சுழன்றது. சுமேரிய சமுதாயத்தில் அரசர்களாக விளங்கி ஆட்சி செய்தவர்கள் மதகுருமார்களே. அவர்கள் இட்டதே சட்டமாகத் திகழ்ந்தது. ஆனால் எகிப்திய சமுதாயத்தில் கடவுளின் அவதாரமாகக் கருதப்பட்ட ஃபெரோவா சர்வசக்தி வாய்ந்தவனாகக் கருதப்பட்டான். எகிப்திய ஃபெரோவாக்கள் சர்வாதிகாரிகளாக விளங்கினார்கள். அவர்களுடைய முயற்சியால்தான் மனித சாதனைகளில் பிரமிக்கத் தக்க பிரமிடுகள் எகிப்தில் கட்டப்பட்டன. அந்தப் பிரமிடுகளில் உபயோகிக்கப்பட்டிருக்கும் பெரும் பாறைகளெல்லாம் இயந்திர உதவியின்றி மனித உழைப்பால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டவை. எகிப்திலுள்ள பிரமிடுகளில் மிகப்பெரியது நானூற்று ஐம்பது அடி உயரமுள்ளது. அதில் உபயோகப் படுத்தப்பட்டுள்ள கல்லின் நிறை 48,83,000 டன்கள்! நைல்நதியின் வழியாக இந்தக் கற்கள் படகில் கொண்டு வரப்பட்டு, மனித உழைப்பால் பிரமிடாக உருவெடுத்தது என்றால், எப்படிப்பட்ட உழைப்பை எகிப்திய மக்கள் நல்கியிருக்க வேண்டுமென்று நீயே சிந்தித்துப் பார்! அந்த மன்னர்கள் எப்படிப்பட்ட கொடுங்கோலர்களாக இருந்தால் இத்தனை மக்களுடைய உழைப்பையும் கறந்திருக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்!

இப்படி எகிப்து மகத்தான சாதனைகளோடு வாழ்ந்தபோதுதான் பாலஸ்தீன யூதர்கள் எகிப்து நாட்டின்மீது படையெடுத்தார்கள். கிறித்தவ வேத நூல் இதைப் பற்றி நூதனமான பல கதைகளைச் சொல்லுகிறது. புராணமாகக் கருதப்படும் அவைகளையெல்லாம் சொல்லி நான் உன்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. [illegible]தப் படையெடுப்புக்குப் பின் எகிப்திய சாம்ராஜ்யம் சிறப்பிழந்தது. நல்ல அறிவுக் கூர்மையுடைய யூதர்களும், நாளடைவில் சீரும் சிறப்பும் பெற்ற பாபிலோனிய சாம்ராஜ்யத்தால் அடிமைப்படுத்தப்பட்டார்கள். ஆனால் நாடோடி இனமாக ஆடுமாடு ஓட்டித் திரிந்த அவர்கள் பாபிலோனியரிடமிருந்து நாட்டுப் பற்றையும் நாகரிகத்தையும் அறிந்து கொண்டார்கள். தங்களுடைய சமூக வாழ்க்கை ஒழுங்குற அமையச் சட்டதிட்டங்களை அமைத்துக் கொண்டார்கள். பாடல்களை எழுதினார்கள்; வருங்காலத்தையே வரையறுத்துச் சொல்ல முயன்றார்கள். அவை எல்லாம்தான் பைபிளின் பழைய ஏற்பாட்டில் (Old Testament) பெரும் பகுதியாக இப்பொழுதும் இருக்கிறது. சட்டதிட்டங்களை வரையறுத்தால் தான் சமூகம் கட்டுக்குலையாமல் இருக்குமென்ற உண்மையை கி. மு. 2100-ல் ஆண்டுவந்த பாபிலோனிய மன்னன் ஹம்மூராபியிடமிருந்து யூதர்கள் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் ஹம்மூராபிதான் பாபிலோனிய மக்களின் பழக்க வழக்கங்களை உருப்படியான சமுதாய விதிகளாக்கி கல் தூண்களில் பொறிக்கச் செய்தவன்.

யூத இனத்தின் வரலாறு உனக்குத் தெரிந்திருப்பது மிக அவசியம். அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை மனித வரலாற்றில் யூத இனம் பிரச்சினைக்குரிய ஒரு இனமாகவே இருந்து வந்திருக்கிறது. இன்றும் இஸ்ரேல் என்ற தனி நாடொன்று யூதருக்கு உண்டாக்கிக் கொடுத்திருந்ததும், அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் சரியான நல்லுறவு நிலவாததால் அடிக்கடி மத்திய கிழக்கில் அரசியல் சிக்கல்கள் தோன்றுவதும், வல்லரசுகள் சிக்கலைத் தீர்க்கத் தலையிடுவதாகக் கூறிக் கொண்டு சிக்கலை அதிகப்படுத்தி உலக நெருக்கடியையே உண்டாக்குவதும் நீ அறிந்ததே!

யூத இனம் மிக உயர்ந்த அறிவைப் பெற்றுள்ள இனம். ஆல்பர்ட் ஸ்வைட்சர் போன்ற பெரிய தத்துவ ஞானிகளையும், மொலடோவ் போன்ற சிறந்த அரசியல் மேதைகளையும், கார்ல் மார்க்ஸ் போன்ற பொருளியல் தீர்க்கதரிசிகளையும் ஐன்ஸ்டைன் போன்ற விஞ்ஞான வித்தகர்களையும் மனித இனத்துக்கு ஈந்து, மனித அறிவு வளர்ச்சியில் பெருந் தொண்டாற்றிய இனம்.

பாபிலோனியர்களுக்கு அடிமைப்பட்டிருந்த யூத இனத்தை ஆரிய மன்னனான சைரஸ் பாபிலோனியாவின்மீது படையெடுத்தபோது விடுவித்து பாலஸ்தீனத்தில் அவர்களை நிம்மதியாக வாழவிட்டான். ஆனால் யூதர்களை மீண்டும் ரோமானியர்களும், பிற்காலத்தில் முஸ்லிம்களும் வெற்றி கொண்டார்கள். இப்படிப் பல முறை பல இனங்களால் வெற்றிக் கொள்ளப்பட்டாலும் யூத இனம் தன் தனித் தன்மை அழியாமலே வாழ்ந்து வருகிறது. இது யூத இனத்தின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் காட்டுகிறது.

யூத இனத்தைப் போலவே மற்றொரு நாடோடி இனம் மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு உலகெங்கும், குறிப்பாக ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. இந்த இனம், இந்தியாவெங்கும் பரவி நின்ற பூர்விகக் குடிகளைப் போரிட்டு விந்தியத்திற்குத் தெற்கே விரட்டி கங்கைக் கரையிலும் சிந்துநதி தீரத்திலும் குடியேறியது. இவர்களது வருகை பற்றியும் இவர்களது வருகையால் இந்தத் துணைக் கண்டத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றியும் எனது அடுத்த கடிதத்தில் எழுதுவேன்.

மற்றவை, உனது கடிதம் கண்டு.

அன்புள்ள,

அகத்தியன்.

வெள்ளி 5—9—58 சென்னை

காமராசர் விளையாட்டு!

கையிலே வேலையும் வாளையும் எடுத்துக் கொண்டு; இரண பேரிகை முழங்க; 'வாழ்வா, சாவா' பார்த்துவிடுவோம் ஒருகை'— என்று வெஞ்சினம் கூறிக் கொண்டு; வெற்றியை நோக்கியோ அல்லது வீர மரணத்தை நோக்கியோ அவர்கள் அணிவகுத்துச் செல்லவில்லை.

எந்த ஜனநாயக நாட்டிலும் அனுமதிக்கப்படுகின்ற பேச்சுரிமையை உபயோகித்து அவர்கள் முன்பே அறிவித்திருந்தபடி சென்னை கடற் கரையில் பிரதமர் நேருவுக்கு ஏன் கருப்புக்கொடி—பிடிக்கிறோம் என்கிற காரணத்தை விளக்குவதற்காகத்தான் சென்றனர்.

அவர்களை அனுமதித்து; போதுக் கூட்டத்தையும் நடைபெற விட்டிருந்தால் அவர்கள் எப்படி அமைதியாகக் காரியமாற்ற வேண்டும் என்பதைச் செவ்வனே விளக்கியிருப்பார்கள்; அப்படி நடந்திருந்தால் பொது மக்களும் ஆத்திரமடைந்திருக்கமாட்டார்கள்; அதனால் பிறகு நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நேர்ந்திருக்காது— என்று பின்னர் தேசியத் தோழர்களே பேசிக் கொண்டதையும்; தேசிய ஏடுகள் சில எழுதியதையும் நாடு அறியும்.

இருந்தும் ஜனநாயக முத்திரையைப் பதித்துக் கொண்டு செங்கோலைப் பிடித்திருப்பவர்கள் கண்மூடித்தனமாகக் காரியமாற்றி விரும்பத்தகாத நிகழ்ச்சிகளுக்குப் பாக்கு வைத்ததோடு மட்டுமின்றி; அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளிட்டு பதினேரு பேர்மீதும் போலீஸ் தடையை மீறியதாக வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணை முடிந்து நீதிபதி இருபத்தைந்து ரூபாய் அபராதம் கட்ட வேண்டும்; அல்லது இரண்டு வாரம் சிறை செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதன்படியே பதினேரு பேரும் அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றனர்.

எப்படியும் தலைவர்களைச் சிறைக்கு அனுப்ப வேண்டும்— என்கிற அவர்களது இச்சை நிறைவேறினுலுங்கூட; இவர்கள் சிறையிலிருந்த சிலமணிநேரம் இந்த நாட்டிலே பேச்சுரிமை எவ்வளவு அடி ஆழத்தில் குழி தோண்டி மூடப்பட்டிருக்கிறது என்பதை உலகுக்கு அறிவிக்கும் பிரகடனமாகவும் இருந்தது.

ஆனால் சிறைச் சென்ற மறுநாளே அரசாங்கம் அந்தப் பதினேரு பேரையும் விடுதலை செய்து தனது அடக்குமுறை நாடகத்திற்குத் தற்காலிகமாகத் திரையைப் போட்டது.

வழக்கு தொடர்ந்து தண்டனை வாங்கிக் கொடுத்ததால் இந்த ஆட்சிக்கு அடக்குமுறையின் மீதுள்ள அடங்காக் காதலும்; அவர்களை விடுதலை செய்ததால் பொதுமக்கள் அபிப்பிராயம் எவ்வளவு வலிமை வாய்ந்தது என்கிற உண்மையை அவர்கள் உணர்ந்து கொண்டதையும் உணர்த்துவதாகத்தான் அமைந்திருக்கிறது.

ஒருநாள் திடீரென்று கைது செய்வானேன்? பிறகு வழக்கு தொடர்ந்து விட்டு அவர்களை வீட்டுக்கு அனுப்புவானேன்?

பிறகு அவர்களை நீதிமன்றத்திற்கு இழுப்பானேன்? பின்னர் மறுநாளே விடுதலை செய்வானேன்?

இப்படித் திடீர் விடுதலை செய்தவர்கள் ஏன் வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும்?

—இவ்வாறு கேள்வி கேட்டுப் பார்த்தவர்கள் காமராசர் ஆட்சியின் இந்தக் குழந்தை விளையாட்டை எண்ணி விலா நோக விழுந்து விழுந்து சிரிக்காமலிருக்கமாட்டார்கள்.

சிறை வாழ்க்கை நமக்குப் புதியதல்ல; விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இது அன்றாட நிகழ்ச்சிதான்!

பண்டிதரே சிறைக் கொடுமைகளைப்பற்றிப் பன்முறை எழுதியும் பேசியும் இருக்கிறார், முன்பு!

'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்னும் அவரது புத்தகத்திலே அவரே ஒருமுறை கைதான விபரத்தைக் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்:

"1934 பிப்ரவரி மாதம் கல்கத்தா வாரண்டின்கீழ் நான் கைதான போது; கமலா என்னுடைய உடைகளை எடுத்து வருவதற்காக மேலே உள்ள எங்கள் அறைக்குச் சென்றாள். அவளிடம் விடை பெறுவதற்காக நானும் அவளைப் பின் தொடர்ந்தேன். திடீரென்று அவள் என்னைத் தழுவிக் கொண்டு; மயக்கத்தோடு அங்கேயே சுருண்டு வீழ்ந்தாள். சிறை செல்வதைப் பெரிது படுத்தாமல் சாதாரணமாகவும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் பழக்கப்பட்டிருப்பதால் இந்தச் சம்பவம் வழக்கத்திற்கு விரோதமாக இருந்தது. ஒருசமயம் இதுதான் எனது கடைசி சந்திப்பு—என்பதற்கான அடையாளமோ?"

—பண்டிதர் இப்படி எழுதியிருக்கிறார். அவர் எழுதியதைப் போலவே மறுபடியும் மனைவியைப் பார்ப்பதற்காக அவர் விடுதலை செய்யப்பட்டு ஜெர்மனி மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டபோது அங்கே திருமதி கமலா நேரு மரணப் படுக்கையில்தான் இருந்தார்.

—ஆங்கிலேயனின் அடக்குமுறை பண்டிதரை சொல்லொணுத் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

அப்படி அனுபவித்தவர் ஆட்சிக்கு வந்திருக்குபோது; முன்பு தான் அனுபவித்த கொடுமைகளை அனுபவிக்க ஒருநாளும் அனுமதிக்கமாட்டார்—என்றுதான் எல்லோரும் எண்ணுவர்.

ஆனால் உண்மையான பண்டிதரோ பதவிக்கு வந்ததும் மரித்துவிட்டார். இப்போது இருப்பவர் அடக்குமுறை வெறித் தாண்டவத்தை நித்திய நிகழ்ச்சியாகக் கொண்டவர்.

திருமதி கமலா நேரு மயங்கிக் கீழே விழுந்தபோது; ஆட்சி நமது கைக்கு வந்ததும் முதலில் ஒழிக்கப்பட வேண்டியது அடக்குமுறைதான் என்று விடுதலை வீரர் பண்டித நேரு சபதம் செய்திருப்பார்.

பதவிக்கு வந்த பிறகுதான் அந்த விடுதலை வீரரான நேரு மறைந்து விட்டாரே! அதனால் பதவிப் பித்தர் நேரு விடுதலை கேட்டவர்களுக்கு சிறைத் தண்டனை அளிப்பதற்குச் சளைக்கவில்லை.

பண்டிதர் எழுதிய வாசகங்கள் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மட்டுமே பொருந்துவதில்லை.

சிறை செல்வதைப் பெரிது படுத்தாமல் சாதாரணமாகவும்; மகிழ்ச்சியோடும் ஏற்றுக் கொள்வதற்கு இன்று தென்னகத்திலே லட்சோப லட்சம் குடும்பங்கள் பழக்கப்பட்டிருக்கின்றன.

கோவாவில் சலாசருடைய சர்வாதிகாரத்தில் பேச்சுரிமை காற்றிலே பறக்கவிடப்படுவதைக் கண்டித்திருக்கிறார் நேரு!

கேரளத்திலே ஏதோ குடி முழுகிவிட்டதாகக் கர்ஜனை புரிகிறார்கள்; அவரது சீட கோடிகள்!

ஆசியாவிலே எங்காவது ஒரு மூலையில் உரிமை பறிக்கப்பட்டால் உள்ளம் பதைபதைப்பதாக நடிக்கிறார், அவர்!

ஆனால் அவரது ஆட்சியின் கீழே சாதாரண பேச்சுரிமை காலடியில் போட்டு மிதிக்கப்படுவது இன்று சர்வ சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

பண்டித நேரு அதே ஏட்டில் பின் கண்டவாறு கூறுகிறார்:

"சிறை பல விதத்திலே பாதிக்கிறது: சிலர் மனமுடைந்தவர்களாகவோ பலஹீனர்களாகவோ மாறுகிறார்கள். மற்றவர்கள் கடினமானவர்களாகவும், தங்கள் குறிக்கோளிலே மேலும் அதிக நம்பிக்கை கொண்டவர்களாகவும் மாறுகிறார்கள். வழக்கமாகப் பின்னால் குறிப்பிடப்பட்ட இவர்களது வலிமைதான் பொது மக்கள் பால் அதிகமடைகிறது."

—நாம் சிறைவாசம் காரணமாக மனமுடைந்து போகிறவர்களோ அல்லது பலஹீனர்களாக மாறுகிறவர்களோ அல்ல.

பண்டிதர் குறிப்பிடுகிறபடி ஒவ்வொரு முறை சிறையிலிருந்து வெளியே காலடி எடுத்து வைக்கிறபோதும், நாம் உள்ளே சென்றபோது இருந்ததைவிட அதிக உரம் பாய்ந்த உள்ளத்தோடுதான் திரும்பி வந்த வண்ணமிருக்கிறோம்!

—இதைத்தான் பேச்சுரிமைக்குப் பிரியா விடை கொடுத்து அனுப்பிவிட்ட பண்டிதருக்கும்; காமராசருக்கும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்!

சென்ற இதழில்...

அறவாழியைச் சந்திக்க பள்ளிக்கூடத்திற்குள் புகுந்து விட்ட பொன்மணி, சிறு தூறல் பெரு மழையாக மாறி விட்ட காரணத்தால், நீண்ட நேரம் அங்கேயே தங்கவும், காதல் உணர்வால் தீண்டப்பட்டுக் கிடந்த அந்த இரண்டு உள்ளங்கள் ஒன்றோடொன்று பேசிக் கொள்ளவுமான வாய்ப்பு கிடைக்கிறது.......

திடீரென்று பொன்மணிக்குத் தாயின் நினைவு வருகிறது. மழையைக் கண்டு அவள் பயந்து விடுவாள் என்று கருதி, உடனே வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்கிறாள். பெரு மழை பொழிந்து கொண்டிருந்த காரணத்தால், அவளை வழியனுப்ப வருகிறான் அறவாழி. ஒரே குடையில் ஒட்டிக் கொண்டபடி அவர்கள் இருவரும் இறங்குகிறார்கள்.......

இதற்கிடையில்,

பொன்மணியின் வீட்டிலோ தந்தை பொன்னையாவின் உடல்நிலை மிக மோசமடைகிறது. இடியும் காற்றும் வியாதியை மிகைப்படுத்துகிறது. தன்னுடைய மறைவுக்குப் பின்னால் தன் குடும்பத்தின் நிலை...? அவர் மனக் கண்முன் பரிதாபமான காட்சிகள் தோன்றி மறைகின்றன......

நிலைமை கணத்திற்குக் கணம் மோசமாகவே, மருத்துவரை அழைக்க வீட்டை விட்டு வெளியே செல்லப் புறப்படுகிறாள் பூஞ்சோலையம்மாள். பொன்னையா தலையணைக்கு அடியில் மறைத்து வைத்திருந்த காகித உறை ஒன்றை அவளிடம் தந்து அதில் கண்டிருப்பது போல் நடந்து கொள்ளும்படிச் சொல்கிறார்...

பூஞ்சோலையம்மாள் மருத்துவர் வீடு நோக்கி ஓட, அறவாழியுடன் உள்ளே நுழைகிறாள் பொன்மணி...

தந்தையின் அசைவற்ற—'ஜில்' விட்ட உடலே அவளை வரவேற்கிறது...

மருத்துவரையும் அழைத்துக் கொண்டு வேகமாக ஓடிவந்த பூஞ்சோலையம்மாள் நிலைப்படி தலையிலே தாக்க உணர்வற்று கீழே சாய்கிறாள்.......

இவைகளை எல்லாம் காணாமல் குடும்பத்துத் தலைவன் நிம்மதியாகக் கண்களை மூடிக் கொள்கிறான்...

"உடம்பிலே உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும் வரையில்தான் மனிதனுக்குக் கவலைகள் — ஆசைகள் — ஆட்டபாட்டங்கள் எல்லாமே! "தூங்குகையில் வாங்குகிற மூச்சு சுழிமாறிப் போனாலும் போச்சு" என்று பெரியவர்கள் சும்மாவா பாடினார்கள்? பெண்டு பிள்ளை நட்பு சுற்றம் எதுதான் மனிதனுக்குப் பின்னால் வருகிறது? இருக்கிறவரையில் எல்லா சுகமும். உடல் சாய்ந்து விட்டால் பிறகு சாம்பல் கூட மிச்சப்படுவதில்லை. உயிர் இருக்கும் வரையில் பிறருக்கு வீட்டுத் திண்ணையில்கூட இடம் கொடுக்க மனிதன் மறுக்கிறான். செத்துவிட்டாலோ, நொறுங்கிப்போன தன் எலும்புச் சாம்பலின்மீது ஆயிரம் பிணங்களை அடுக்கடுக்காகப் படுக்க வைத்தாலும் அவன் மறுப்பதில்லை.

"அடடா; உயிர் உள்ளவரையில் என்னென்ன போட்டி — எவ்வளவு வம்பு — எத்தனை திமிர்! பிணமாகி விட்டால் எறும்புகூட அவன் கண்களைப் பிடுங்கித் தின்றுவிடுகிறது. இருதயக் கூட்டில் புழு மேய்கிறது. யார் யாரை எப்படி அழிக்கலாம் என்று திட்டம் போடுகிறவர்கள் கொஞ்சம் அமைதியாக உட்கார்ந்து தங்களுக்கும் சாவு வரும் என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் உலகத்தில் கலகமே யிருக்காது. எல்லோரும் சந்தோஷமாகவே இருப்பார்கள். ஆனால் மனிதன் அதை நினைப்பதேயில்லையே! யார் வீட்டு உழைப்பிலாவது வாழ வேண்டும் —யார் கொட்டுகிற வியர்வையிலாவது உல்லாசம் பெற வேண்டும் — யார் சிந்தும் இரத்தத்திலாவது வாழ்க்கைத் தோணியை மிதக்க விடவேண்டும்— என்றல்லவா திட்டம் போட்டுத் திரிகிறான்! காற்றடைத்த பை போன்ற இந்த சரீரம் ஒருநாள் படீரென்று வெடித்துப் பஸ்பமாகிவிடும் என்பதை என்றைக்காவதுதானே அவன் நினைத்து உடனே மறந்து விடுகிறான்.

"அய்யோ—யார் யார் மனம் நோகப் பேசிவிட்டோம்— எவர் எவர் குடியை யெல்லாம் கெடுத்துவிட்டோம்— நல்லவனைப் போல வெளிவேஷம் போட்டு நாம் குட்டிச் சுவராக்கிய குடும்பங்கள் எத்தனை!......இந்தக் கணக்கெல்லாம் மரணப் படுக்கையில் கிடக்கும் மனிதன் சரியாகப் போடும் மணக் கணக்குகளாகி விட்டனவே தவிர, உயிரோடிருப்பவனின் உள்ளத்துப் போராட்டமாயிருப்பதில்லையே!"

—சாவு வீடுகளில் வாழ்க்கையில் அலுத்து சலித்த பெரியவர்கள் துக்கம் விசாரித்துவிட்டு இதுபோல்தான் கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள்.

பொன்னையாவின் மரணச் செய்தி கேட்டுக் கூடியவர்களும் இத்தகைய தத்துவங்களைப் பேசிடத் தவறவில்லை. பொதுவாக வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சி பெரும்பாலும் சாவு வீடுகளில்தான் மிகத் தீவிரமாக நடைபெறும். துக்கம் விசாரிக்க வந்த ஒவ்வொரு எதிர் காலப் பிணமும், வாழ்வின் நிலையாமை— வாழ்வில் இனிமேலாவது கடைப்பிடிக்கவேண்டிய முறைமைகள் — எல்லாவற்றையும் பற்றி சிந்திக்கவோ அல்லது பேசிடவோ தவறுவதில்லை. ஆனால் இடுகாட்டிலிருந்து திரும்பியதும் அனைத்துமே மறந்துபோய் விடுகின்றன. உயிர் விடும்போது தன் தவறுகளுக்காக வருந்திக் கண்ணீர் விட்டவன் கூட, தற்செயலாக இடுகாட்டில் உயிர் பெற்றுத் திரும்பி வீட்டுக்கு வந்து விட்டால்கூட, சாகும்போது நினைத்தவற்றையெல்லாம் நிச்சயம் மறந்தே விடுவான். அதற்காக உலக வழக்கமாகிவிட்ட "சாவு வீட்டுப் பேச்சு" நின்று விடுகிறதா? இல்லவே இல்லை.

பொன்னையாவின் உடலைத் தழுவிக் கொண்டு பூஞ்சோலை கதறினாள்.

பொட்டும் மஞ்சளும் பூவும் தாலியும் போய் விட்டதேயென்று தான் கணவனை இழந்த பெண்கள் கதறுவார்கள். "அவைகளை யெல்லாம் இழந்துவிடு! உன் கணவனைத் திருப்பித் தருகிறேன்" என்று யாராவது சொன்னால் அப்போது மஞ்சளையும் தாலியையுமா பிடித்துக் கொண்டிருப்பார்கள்? மஞ்சள் குங்குமம் போனாலும் பரவாயில்லை; மணாளன் உயிர் பெற்றால் போதும் என்றுதான் கூறுவார்கள்.

பூஞ்சோலைக்குத் தன் கணவனின் உயிர் மீண்டும் வந்து விடாதா என்ற ஆவலே அதிகமாக இருந்தது. உடலைக் குளிப்பாட்டிப் பல்லக்கிலே வைக்கும் வரையில் அவள் அப்படித்தான் எதிர்பார்த்தான்.

பொன்மணி தந்தையின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "அய்யோ, அப்பா! இனி எனக்கு யாரப்பா துணையிருக்கிறார்கள்? எங்களை யெல்லாம் அனாதைகளாய் விட்டு விட்டு இப்படி அசையாமல் படுத்திருக்கிறீர்களே அப்பா!" எனப் புலம்பினாள்.

சுருளிமலையின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. அப்படியே ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான்.

நீச்சட்டி சிங்காரம் ஆக வேண்டிய காரியங்களை அக்கறையோடு கவனித்தான்.

கற்பூரம் பெண்கள் பகுதியில் தலைமை வகித்துக் காரியங்களைச் செய்தாள்.

கண்ணனும் சிங்காரத்துடன் போட்டி போட்டுக் கொண்டு அங்குமிங்கும் ஓடினான்.

சவத்தின் நெற்றியிலே சிங்காரம் விபூதியைப் பூசுவான்; உடனே கண்ணன் அதன் மீது சந்தனப் பொட்டை வைப்பான்! சடலத்தைப் பல்லக்கில் கிடத்த தலைப் பக்கம் பிடிப்பான் சிங்காரம்; கால் பக்கம் தாங்கிக் கொள்வான் கண்ணன்!

சுருளிமலையைக் குளிப்பாட்டி, அவனது கையிலே கொள்ளிச் சட்டியைக் கொடுத்து, அதைத் தன் கையிலே வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் சிங்காரம். கண்ணன் பல்லக்கின் ஒரு பகுதிக்குத் தோள் கொடுத்துத் தூக்கிக் கொண்டான். இவைகளை யெல்லாம் அறவாழி கவனித்தவாறு, பிரேத ஊர்வலத்தின் பின்னே மெதுவாக நடந்து சென்றான்.

மனைவி மக்களை, மாடுமனைகளைப் பிரிந்து பொன்னையர், திரும்பிவராத பயணம் புறப்பட்டு விட்டார். வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டால் பிறகென்ன? ஓட்டமும் நடையுமாக அனைவரும் இடுகாட்டை அடைந்தனர்.

விற்பனையாகிறது!

முத்தாரம்

இருபதாவது இதழ்!

சிலப்பதிகாரத்திற் சுவை

* இளங்கோ படைத்த சிலம்புக் காவியத்தின் மாணிக்கப் பரல்கள் சிலவற்றைத் தொகுத்துத் தருகிறார், டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள்.

அணுவின் காதல்

* காதல் இலக்கணத்திற்குப் புதிய தத்துவ விளக்கம்—பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் தொடர் கட்டுரையின் முதற் பகுதி!

பிழைகள் மலிந்த பள்ளி இறுதிப் பாடநூல்

* அரசியலார் வெளியிட்டிருக்கும் 1959—ம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வுப் பாடநூலில் மலிந்து கிடக்கும் பிழைகளை எடுத்துக் காட்டித் திருத்தம் தரும் நீண்ட கட்டுரை—புலவர் குழந்தை எழுதுகிறார்.

குவெண்டின் டர்வர்ட்

* சர். வால்டர் ஸ்காட்டின் பள்ளி இறுதித் தேர்வுக்கான (1959) ஆங்கிலத் துணை நூலை மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி தமிழில் சுருக்கித் தருகிறார் சு. கல்யாணம் எம். ஏ., பி. டி., அவர்கள்.

மற்றும்

நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ., நா. பாண்டுரங்கன் எம். ஏ.,
இரே. இளம்வழுதி எம். ஏ., பி. எல்—ஆகியோரின்
கருத்தோவியங்களும் இடம்பெறுகின்றன!

"நமக்கும் இதுதான் கதி!" எனச் சொல்லிப் பொன்னையாவின் மேனியைச் சிதையில் வைத்து நெருப்பு மூட்டினார்கள்.

"விளக்கின் மேலேயுள்ள கண்ணாடியைத் தொட மனிதன் பயப்படுகிறான் சுட்டு விடுமென்று! இதோ, நெருப்பிலேயே இப்போது குளிக்கிறான்!" என்று முணுமுணுத்தவாறு எல்லோரும் வாய்க்காலில் குளித்துக் கரை யேறினார்கள். அதற்குள் மயானத்துத் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய ஊதியம், படி, முதலிய கணக்கு வழக்குகளைத் தீர்ப்பதில் சிங்காரமும் கண்ணனும் ஒருவரை மிஞ்சி ஒருவர் தீவிரம் காட்டினர்.

ஊருக்குள் திரும்பும் வழியில் பொன்னையா குடும்பத்தின் எதிர்காலம் பற்றிய பேச்சு பலமாக எழுந்தது.

"அந்தப் பெண்ணை யார் தலையிலாவது கட்டியிருந்தால் நல்லா யிருந்திருக்கும்!"

"செத்தது தான் செத்தான்; அந்தப் பெண்ணுக்கு ஒரு கல்யாணத்தை முடித்து விட்டுச் சாகக் கூடாதா மனுஷன்?"

"கல்யாணம் பண்ணிவைக்கிறதுன்னு சாமான்யமா இருக்குதா? பணம் காசு வேண்டாமா? நல்ல மாப்பிள்ளை கிடைக்க வேண்டாமா?"

—இப்படி ஆரம்பமான பேச்சினூடே கரகமாடிக் கண்ணனும் கலந்து கொண்டான்.

"பொன்னையா மாமா மேலே ஒரு குற்றமும் இல்லை. குற்றமெல்லாம் என் மேலே தான்!"

—கண்ணனின் பேச்சு கேட்டு எல்லோரும் வியப்படைந்தனர்.

"உன்மேல் என்ன குற்றம்?"—ஒரு பெரியவர் கேட்டார்.

"பொன்மணியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று என்னைப் படாதபாடு படுத்தினார். நான் தான் நாளைத் தள்ளிப் போட்டுக் கொண்டே காலங்கடத்தி விட்டேன்!"

கண்ணன் மிக அலட்சியமான முகபாவத்தோடு சர்வசாதாரணமாக இதைச் சொல்லியவாறு நடந்தான்.

"கற்பூரத்தைக் கட்டிக்கப் போறேன்னு ஊரெல்லாம் ரகளைப்படுது! நீ எங்க பொன்மணியைக் கல்யாணம் பண்ணிக்கிறது?"—இன்னொருவர் சந்தேகம் கிளப்பினார்.

"கற்பூரமாவது சூடனாவது? அந்தப் பயல் வீட்டில் யார் பெண் கட்டுவார்கள்? அவள் என்னமோ என் காலில் வந்து விழுகிறாள். அவளை நான் ஏற்றுக் கொள்ள வில்லையென்று தானே சில பேருக்கு ஆத்திரம் மீசை துடிக்குது!" என்றவாறு கண்ணன் சிங்காரத்தை ஜாடையாக நோக்கினான்.

சிங்காரமும் கனல் தெறிக்கக் கண்ணனை உற்றுப் பார்த்து விட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

"கண்ணனுக்கும் பொன்மணிக்கும் பொருத்தம்தான். கடவுள் கிருபையினாலே சீக்கிரம் கல்யாணம் முடிஞ்சா பொன்னையாவோட ஆத்மாவும் சாந்தி அடையும்!"—ஒரு கிழவனார் கூனிக்கூனி நடந்தவாறு பொக்கை வாய் திறந்து இந்தப் பொன்மொழிகளைக் கொட்டினார்.

"சரிதான்; சும்மா வாங்க. சாவு வீட்டிலே என்ன கல்யாணப் பேச்சு?"—தீச்சட்டி சிங்காரம் உரக்கக் கத்தினான் பயங்கரமான குரலில்.

சிறிது நேரம் கூட்டத்தில் பேச்சில்லை. எல்லோரும் அமைதியாக நடந்தார்கள். கண்ணன் பேச ஆரம்பித்தான். அவன் குரலில் இறுமாப்பும் தைரியமும் இருந்தது.

"கல்யாணப் பேச்சு பேசினால் யாருக்கென்ன நஷ்டம்? நமக்குக் கிடைக்கவில்லையே என்று நாக்கைத் தட்டிக் கொண்டிருப்பவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்—பாவம்!" என்று நகைத்தான்.

"எனக்கு எதற்கு கல்யாணம்? நான் நினைத்தால் ஆயிரம் பெண் வரும்!"—சிங்காரம் கத்தினான்.

"வரும்! வரும்! வந்து தூக்கு மாட்டிக் கொள்ளும்!"

"அவனை மரியாதையாகப் பேசச் சொல்லுங்கள்!"

"கல்யாணம் வேண்டாம் என்கிறவன் என் கல்யாணத்தில் எதற்காகத் தலையிட வேண்டும்?"

"பொன்மணிக்காக வாதாட எனக்கு உரிமையுண்டு!"

"வருங்காலக் கணவனாகிய எனக்கு இல்லாத உரிமை இவனுக்கு எப்படி வந்தது?"

"கணவன்! உனக்கு மாலையிடத்தான் துடிக்கிறாளோ?"

"பிறகென்ன — உனக்காக மாலையிடப் போகிறாள்?"

இருவரும் ஒருவரையொருவர் கடித்து விழுங்கி விடுவதைப் போல் எதிர் எதிரே நெருங்கிவிட்டனர். யாரும் அவர்களை விலக்கிடத் துணியவில்லை.

அறவாழி, தீச்சட்டி சிங்காரத்தின் கையைப் பிடித்து தனியே அழைத்தான். அதற்குள், கண்ணன் பெருங் கூச்சலிட்டு அறவாழியின் கன்னத்தில் "பளார், பளார்" என அறைந்து விட்டான். அவ்வளவுதான்; சிங்காரம் கண்ணன்மீது பாய்ந்தான். இருவரும் தெருவில் கட்டிப் புரண்டார்கள். பொன்னையாவின் சாவுகூட மறந்து போய்விட்டது. அவர்களை சமாதானப்படுத்துவதுதான் ஊராருக்குப் பெரிய தலைவேதனையாகிவிட்டது.

நெடுநேரம் ஒருவருக்கொருவர் சளைக்காமல் சண்டையிட்டு, இறுதியில் இருவரும் எழுந்து நின்று புலியைப் போல் உறுமினார்கள். "உன் உயிரை எடுக்கிறேன் பார்!" என்று இருவரும் ஏக காலத்தில் கத்தினார்கள்.

பஞ்சாயத்தார் பரமசிவத்துக்கு செய்தி எட்டி அவர் அங்கே ஓடோடி வந்தார். நடந்ததை விசாரித்தார்.

"பொன்மணி என் மனைவி" என்று முழங்கினான் கண்ணன்.

அறவாழிக்கு இருதயம் கனத்தது. தன்னைத் தானே அமைதிப்படுத்திக் கொண்டான். தனக்கும் தன் காதலி பொன்மணிக்கும் அந்த ஊரில் ஒரே ஒரு துணை சிங்காரம்தான் என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

"பொன்மணி உன் மனைவியல்ல!"—சிங்காரம் ஆங்காரமாகப் பதில் சொன்னான்.

"யார் எதிர்த்தாலும் சரி—அவள் எனக்குத்தான் சொந்தம்!"—கண்ணன் கர்ச்சித்தான்.

"கனவு காணாதே! அவள் எனக்குத்தான் சொந்தம்!"—என்று சிங்காரம் ஆவேசக் குரல் எழுப்பினான்.

சிங்காரத்தின் குரலைக் கேட்ட அறவாழிக்குத் தலையில் இடிவிழுந்தது போலிருந்தது. அப்படியே மரம்போல் நின்றுவிட்டான். தந்தையை இழந்த துக்கத்தில் வந்து கொண்டிருந்த சுருளிமலை அவர்களுக்கு எதிரே வந்து நின்றான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

"என் அக்காளைப் பற்றி தெருவிலே பேசி சண்டை போட உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? எங்கள் வீட்டில் பெண் கட்ட வேண்டுமானால் ஒரு நிபந்தனை யிருக்கிறது!" என்றான் நிதானமாக!

"என்ன நிபந்தனை?"—பஞ்சாயத்தார் கேட்டார்.

"கோயில் காளை சிவாவை யார் அடக்குகிறார்களோ அவனுக்குத்தான் என் அக்கா மாலையிடுவாள்!"

"ப்பூ! இதுவா பிரமாதம்? நான் அடக்குகிறேன் அந்தக் காளையை! எனக்கேதான் பொன்மணி!" — கண்ணன் வெற்றிச் சிரிப்பு சிரித்தான்.

"சுருளிமலை! உன் நிபந்தனைக்கு நான் கட்டுப்படுகிறேன். ஆனால் ஒன்று; பஞ்சாயத்தார் அவர்களே! காளையை அடக்குகிறவனுக்குப் பொன்மணி! அடக்காமல் தோற்று விட்டால் அவன் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கொண்டு கழுதையின்மீது ஊர்வலம் வர வேண்டும்!" என்று கண்டிப்பாகக் கூறினான் சிங்காரம்.

"ஓ, நான் தயார்!" என்றான் கண்ணன்.

அறவாழிக்கு இருதயம் நின்றுவிடும் போலிருந்தது. யார் கண்ணிலும் படாமல் வேகமாகப் பள்ளிக்கூடம் நோக்கிப் புறப்பட்டான்.

தொடரும்

குயிலே, கூவாதே!

பாஸ்போர்ட்: ஒரு விளக்கம்

தில்லை. மறைமுதல்வன். எம்.ஏ.பி.எல்

இந்திய அரசியல் சட்டத்தின் பூர்வ பீடிகை, இந்தியாவை' பூர்ண சுதந்திரமுள்ள ஜனநாயகக் குடியரசு' என்று வர்ணித்துக் கொண்டு ஆரம்பிக்கிறது. இந்திய மக்களாகிய நாம், இந்தியாவின் எல்லா குடி மக்களுக்கும் நீதியும், சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் கிடைக்கச் செய்ய இந்திய அரசியல் அமைப்பை சட்டமாக இயற்றி, நமக்கே அளித்துக் கொண்டிருக்கிறோம் என்று கொட்டி முழக்குகிறது! எத்தனை அழகான வாசகம்! ஆனால் இது இன்னும் வெறும் வாசகமாகவே இருந்து கொண்டிருக்கிறது என்பதுதான் மிகவும் சுவைமிக்க செய்தி!

மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பறித்த கொடுங்கோல் மன்னர்களைப் பற்றி கடந்த நூற்றுண்டுகளின் வரலாறு நமக்கு எடுத்துச் சொல்லுகிறது. இங்கிலாந்தில் ஸ்டுவர்ட் வம்ச அரசர்கள், பிரான்சின் பூர்பன் வம்சத்து வேந்தர்கள், ரஷ்யாவில் ஜார் பரம்பரை — இப்படி ஏதேச்சாதிகாரிகளின் பட்டியல் நீண்டு போகிறது. ஆனால் மக்களின் அடிப்படை சுதந்திரங்கள் மன்னராட்சியில் மட்டும்தான் பறிக்கப்படுமென்பதில்லை. ஜனநாயக அரசுகளில்கூட நீரோக்கள் இருக்கத்தான் செய்கின்றனர்!

இந்தியாவில் நடப்பது ஜனநாயக அரசாங்கம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அடக்குமுறையின் அமுல் நடக்காத நாளில்லை!

"இதோ, இன்னின்ன ஜீவாதார உரிமைகள் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு எதிராக எந்த விதமான சட்டங்களும் இயற்றப்படக்கூடாது. மீறி இயற்றப்படுமானல் அவைகள் செல்லத்தக்கவை அல்ல என்று தீர்ப்பளிக்க நீதி மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது" என்று அரசியல் சட்டம் பறைசாற்றுகிறது. ஆனால் ஜீவாதார உரிமைகள் சாமர்த்தியமான முறைகளில் பறிக்கப்படுவதை நாம் பார்த்துக் கொண்டுதான் வருகிறோம்!

அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று இதற்கு நல்லதொரு சான்றாகும். நமது தோழர்கள் மதியழகன், தில்லை வில்லாளன் இருவரும் இலங்கை செல்ல இந்திய அரசாங்கம் அனுமதி தர மறுத்துவிட்டது. தோழர்கள் இருவரும் தமிழக அரசியலில் குறிப்பிடத் தகுந்த இடத்தைப் பெற்றவர்கள். நல்ல தமிழில் அழகொழுகப் பேசிடும் சொற் செல்வர்கள். இதயங் கவர்ந்திடும் வண்ணம் எழுதிடும் ஆற்றல் பெற்றவர்கள். இவர்களின் எழுத்தும் பேச்சும் கடல் கடந்து சென்றதில் வியப்பில்லை. இலங்கை வாழ் தமிழர்கள், தோழர்கள் இருவரும் இனித்திடும் தமிழில் அள்ளித்தரும் கருத்துக்களைக் கேட்க ஆவல் கொண்டு, மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளுமாறு அழைத்தனர். அரசாங்கமோ அனுமதி தர மறுத்துவிட்டது!

அனுமதி தர மறுத்த காரணம் என்ன?

விளக்கம் தரப்படவில்லை. ஆனல் விளக்கம் நமக்குத் தெரியும்! நமதியக்கத்தின் இலட்சியங்கள் வெளி நாடுகளிலும் பொலிவு பெற்றுவிடுமே என்ற அச்சம்!

நமதியக்கத்தைச் சேர்ந்தவர்களின் புகழ் பரவிவிடுமே என்ற பொருமை!

இதைத் தவிர வேறு என்ன காரணமிருக்க முடியும்?

நாடு முழுவதும் தடையின்றி நடமாடும் ஜீவாதார உரிமையை அரசியல் சட்டத்தின் 19-வது பிரிவு அளித்திருக்கிறது. இந்த உரிமை வெளி நாடுகளுக்குச் சென்று மீண்டும் திரும்பி வருவதையும் உள்ளடக்கியதாகும். இது சட்டத்தாலும் பறிக்க முடியாத உரிமை! எனினும் இந்த உரிமையைக் கட்டுப்படுத்தும் விதிகளையும் கூடவே இணைத்திருக்கிறார்கள் சட்டத்தை வகுத்தவர்கள்! நியாயமான கட்டுப்பாடுகளும், பொது நன்மையைக் கருதி செய்யப்படும் கட்டுப்பாடுகளும் அனுமதிக்கப்படுமாம்! ஆனல் எந்த நியாயத்தின் பேரில், எந்த பொது நன்மையைக் கருதி நமது தோழர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது?

அரசியல் சட்டத்தின் 14-ம் பிரிவு சட்டத்தின்முன் சமத்துவம் அளிக்கிறது. இந்தப் பிரிவு வேற்றுமைப்படுத்தி செய்யப்படும் சட்டங்களையும், மனம் போன போக்கில் தன்னிச்சையாக செய்யப்படும் பாகுபாடுகளையும், அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று கூறி, அவைகளை ஒதுக்கித் தள்ளுகிறது. ஆனல் நமது தோழர்கள் இலங்கை செல்ல அனுமதி தர மறுத்தது வேற்றுமைப் படுத்தி செய்யப்பட்ட நடவடிக்கை அன்றி வேறென்ன?

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானல், நினைத்ததெல்லாம் நடக்கிறது. கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஜோட்டி பாசுவும், டாங்கேயும், ஏ. கே. கோபாலனும், அஜாய் கோஷும் தங்கள் 'மெக்கா'—வான மாஸ்கோவுக்கு அடிக்கடி சென்று அரசியல் வைத்தியம் செய்துகொண்டு வருகின்றனர்! இவர்கள் வெளிநாடு போவதில் நமக்கொன்றும் தடையில்லை. ஆனல் நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அனுமதி மறுப்பானேன்?

இதன் பெயர்தான் சட்டத்தின்முன் சமத்துவமா?

இதுதான் ஜீவாதார உரிமைகள் அமுல் நடத்தப்படுவதன் லட்சணமா?

இந்தத் தான்தோன்றித்தனமான செய்கைகளை தட்டிக் கேட்க வழி யென்ன? வெளி நாடுகளுக்குப் போக அனுமதி தரும் 'பாஸ்போர்ட்' முறை பற்றி சட்டம் என்ன சொல்லுகிறது? இந்த நாட்டில் ஜனநாயகம் வளர வேண்டுமென்பதில் உண்மையாகவே அக்கரை கொண்டவர்கள் இப்பிரச்சினைகளுக்கு ஒரு விளக்கம் காண முயற்சிப்பது மிகமிக இன்றியமையாததாகும் — இன்றைய உடனடியான தேவையுமாகும்!

1954—ம் ஆண்டில், சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசாங்கம் ரஷ்யா செல்ல பாஸ்போர்ட் வழங்க மறுத்ததை எதிர்த்து, வி. ஜி. ராவ் என்பவரால் வழக்குத் தொடரப்பட்டது. பிரதம நீதிபதி ராஜமன்னர், ராமச்சந்திர ஐயர் இருவரும் வழக்கை விசாரித்தனர். முடிவில்,

"பாஸ்போர்ட் கோருவது எந்த விதமான சட்ட பூர்வமான உரிமையின் பேரிலும் அமைந்ததல்ல! அது ஒரு சலுகைதான்! அந்தச் சலுகையைத் தருவதோ, தர மறுப்பதோ அரசாங்க நிர்வாகத்தின் விருப்பத்தைப் பொருத்தது!"

—என்று கூறி நீதிபதிகள் வழக்கைத் தள்ளிவிட்டனர். எனினும் அவர்கள் அளித்த தீர்ப்பு சிந்தனைக்குரிய பல பிரச்சினைகளைக் கிளப்பி விட்டிருக்கிறது!

இங்கிலாந்தில், 14—15—ம் நூற்றாண்டுகளில் அரசாங்க அனுமதி இன்றி எந்தக் குடிமகனும் நாட்டை விட்டுப் போகக்கூடாது என்று சட்டமிருந்தது. காரணம், குடிமக்கள் நாட்டை விட்டு வெளியேறினல் அவர்கள் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்துவரும் சேவைகள் பறிபோகின்றன என்று கருதப்பட்டது. அமெரிக்காவிலும் இதே நிலைதான். பாஸ்போர்ட் இன்றி எந்த குடிமகனும் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்று சட்டமியற்றப்பட்டது. ஆனல் இத்தகைய சட்டங்கள் தற்காலிகமானவையே! நெருக்கடி காலங்களில் மட்டுமே அமுலாக்கப்பட்டன!

இந்தியாவில் இது பற்றிய சட்டம் மிகக் குறுகியது—மிக விசித்திரமானது! இந்திய பாஸ்போர்ட் சட்டம் 1920-ம் ஆண்டு இயற்றப்பட்டது. அச் சட்டத்தின்கீழ் 1950—ம் ஆண்டில் விதிகள் வகுக்கப்பட்டன. சட்டத்தின் 3—வது பிரிவு பின்வருமாறு காணப்படுகிறது:

"வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் நுழையும் எவரும், செல்லத் தக்க பாஸ்போர்ட் இன்றி, தரை மூலமாகவோ, கடல் மார்க்கமாகவோ, வான வெளி வழியாகவோ, நுழையவோ, நுழைய முயற்சிக்கவோ கூடாது!"

எனவே, பாஸ்போர்ட் பற்றிய சட்டம் இந்தியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து வருபவர்களைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்தியாவை விட்டு வெளியேற பாஸ்போர்ட் தருவதுபற்றி எந்த விதமான சட்ட விதிகளும் காணோம்.

இதுபற்றி மேற்குறிப்பிட்ட வழக்கில் பிரதம நீதிபதி ராஜமன்னர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இன்றுள்ள சட்டப்படி இந்தியக் குடி மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதையோ, அல்லது பிறகு மீண்டும் திரும்பி வருவதையோ பாஸ்போர்ட் இல்லாத ஒரே காரணத்தால் தடுக்க வழியில்லை!"

பாஸ்போர்ட் சட்டத்தின் விதிகளும் கட்டுப்பாடுகளும் இந்தியப் பிரஜைகளைப் பாதிக்காது என்பதுதான் மேலே காணப்படும் வரிகளின் சாராம்சம். ஆனல் இதற்கு மாறான தீர்ப்பை, 1958—ம் ஆண்டு, மார்ச் மாதம் நடைபெற்ற வழக்கொன்றில், பம்பாய் உயர் நீதி மன்றம் அளித்திருக்கிறது.

ரகமெத்துல்லா என்ற இந்தியப் பிரஜை பாஸ்போர்ட் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்ததற்காக தண்டிக்கப்பட்டார். உயர்நீதி மன்றம் அந்தத் தண்டனையை உறுதிப் படுத்திவிட்டு இந்திய பாஸ்போர்ட் சட்டம், வெளிநாட்டவருக்கும் இந்தியக் குடி மக்களுக்கும் வேறுபாடின்றி அமுலாக்கப்படும் என்று தீர்ப்பு வழங்கிற்று!

இரண்டாம் பதிப்பு விற்பனையாகிறது!

அமிர்தம்

நாடோடி மன்னன் சிறப்பு மலர்

திரைக்கதை வசனம் பாடல்களோடு

அறிஞர் அண்ணா, இராதாமணாளன், இராஜேந்திரன், நாராயணசாமி, நம்பியார், வீரப்பா, ரவீந்தர், எம். என். ராஜம், பி. எஸ். சரோஜாதேவி முதலியோரின் சிறப்புரைகளும் இடம் பெறுகின்றன.

விலை 50 காசு

அமிர்தம், சென்னை-14

காற்றே, வீசாதே!

பாஸ்போர்ட் இன்றி நேர்மையான வழியில் வெளி நாடுகளுக்குப் போக சாத்தியக் கூறுகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை! சொந்த நாட்டு அரசாங்கம் பாஸ்போர்ட் தர மறுக்கும்போது, வெளிநாட்டு அரசாங்கம் மட்டும், வெளி நாடுகளுக்குள்ளே நுழைவதற்குரிய அனுமதியான 'விசா' தர முன்வருமா என்ன? அல்லது பாஸ்போர்ட் இல்லாமல் கப்பல் அதிகாரிகளோ, அல்லது விமான அதிகாரிகளோ பிரயாணம் செய்ய அனுமதிப்பார்களா என்ன?

மேற் குறிப்பிட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்கிலும் இதே பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. அதற்கு பிரதம நீதிபதி ராஜமன்னர் கேட்டார், "யார், எந்த அதிகாரத்தின் பேரில், பாஸ்போர்ட் இன்றி கப்பலிலோ அல்லது விமானத்திலோ பிரயாணம் செய்வதைத் தடுக்க முடியும்?" என்று!

இதற்கு விடை கூற வேண்டுமானல் எவராவது பரீட்சித்துப் பார்த்தால்தான் உண்டு!

சட்டம் அந்த அளவுக்கு புதிராக இருக்கிறது! திட்டவட்டமான சட்ட விதிகள் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை! பாஸ்போர்ட் தரும் அதிகாரம் அரசாங்க நிர்வாகத்தின் தான் தோன்றித்தனமான கரங்களில் விடப்பட்டிருக்கிறது! இதனுல் இந்தத் துறையில் அரசாங்க நிர்வாக யந்திரத்தின் வெறும் விருப்பங்களே சட்டங்களாக ஆட்டிப் படைக்கின்றன.

பிரதம நீதிபதியும் இதை உணராமலில்லை. அவரே குறிப்பிடுகிறுர்—

"பாஸ்போர்ட் அளிக்க மறுப்பதன் மூலம் அரசாங்கம், குடிமக்கள் வெளி நாடுகளுக்குப் போவதை, அரசியல் அல்லது கொள்கை வேறுபாடு காரணங்களுக்காகத் தடை செய்துவிடமுடியும் என்பதை நாங்கள் உணருகிறேம்."

அரசியல் அல்லது கொள்கை வேறுபாடு காரணங்களுக்காக பாஸ்போர்ட் தர மறுப்பதை எதிர்த்து அமெரிக்காவில் அடிக்கடி கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. 1952-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளிவந்த 'ஏல்' சட்ட ஏட்டில் (YALE-Law Journal. Feb. 1952) பாஸ்போர்ட் பற்றி ஒரு சுவையான கட்டுரை இருக்கிறது. அக் கட்டுரையாளர் ஓரிடத்தில் பின்வருமாறு எழுதுகிறுர்:

"தற்காலிகமாக சொந்த நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குப்போகும் தனி மனிதனுக்கும், நாட்டுக்கும், உலக நலத்துக்கும் இன்றியமையாததாகும்! ஆனுல் இந்த உரிமை இன்று பாஸ்போர்ட் பெறுவதில் சிக்கிக் கிடக்கிறது. பாஸ்போர்ட் மறுக்கப்பட்ட குடிமகன் தன் நாட்டை விட்டுப் போகவோ அல்லது வெளி நாட்டுக்குள் நுழையவோ முடியாமல் திண்டாடுகிறுன்."

இக்கட்டுரை ஆசிரியர் அமெரிக்க அரசியலில் அக்கரை கொண்டு இதை எழுதியிருக்கிறுர். ஆனுல் இது எல்லா நாடுகளுக்குமே பொருந்தக் கூடியதுதான்!

1941-ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில், குடிமக்கள் பாஸ்போர்ட் இன்றி நாட்டைவிட்டு வெளியேறுவது சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கிறது. பால் ராப்சன் என்ற கீர்த்தி பெற்ற அமெரிக்க நீக்ரோ பாடகருக்கு, வெளி நாடுகளுக்குச் செல்லும் பாஸ்போர்ட் தர அமெரிக்க அரசாங்கம் மறுத்தது உலகெங்கும் பரபரப்பூட்டிய நிகழ்ச்சியாகும். காரணம் அந்தப் பாடகர், பொதுஉடமை சித்தாந்தங்களைப் பற்றியும், நீக்ரோ மக்களின் உரிமை ஆர்வத்தைப் பற்றியும் பாடினுர் என்பதுதான்! அமெரிக்க அரசாங்கத்தின் போக்கை எதிர்த்து உலகெங்குமே கண்டனம் கிளம்பியது! ரஷ்யாவும் கண்டித்தது. ஆனுல் ரஷ்யா கண்டித்ததில் எந்த வித அர்த்தமுமில்லை—பொருத்தமுமில்லை! ஏனெனில் ரஷ்யாவுக்கும் ஜனநாயகத்துக்கும் எத்தனை நெருங்கிய உறவு என்பது நீண்ட நாட்களுக்கு முன்பே வெட்ட வெளிச்சமான சங்கதி!

மேற் குறிப்பிட்ட கட்டுரையாளர் வெளி நாடுகளுக்குச் செல்வது மனிதனின் உரிமை என்றும், அது சுதந்திரத்தின் ஒரு அங்கம் என்றும், சுதந்திரம் என்பது அமெரிக்காவின் எல்லைக் கோட்டுடனேயே முடிந்து விடுவதில்லை என்றும் மிக அழகான — தீவிரமான வாதங்களை அக்கட்டுரையில் தந்திருக்கிறுர். கட்டுரையின் இறுதி வாசகங்கள் பின் வருமாறு காணப்படுகின்றன:

"குடிமக்களுக்கு பாஸ்போர்ட் தர மறுப்பது, சர்வாதிகார அரசுகளின் முக்கிய பயமுறுத்தலாக, அடக்குமுறை ஆயுதமாக இருந்துவருகிறது. பாஸ்போர்ட் மறுக்கப்பட்ட குடிமகன் நாட்டுக்குள்ளேயே சிறை வைக்கப்படுகிறுன். வெளிநாடுகளின் நிலைபற்றி நேரில் தெரிந்து கொள்வதிலிருந்தும் தடுக்கப்படுகிறுன்.

"சர்வாதிகார அரசுகள் தங்கள் குடிமக்களுக்கு, வெளி நாடுகளுக்குச் சென்று வரும் மனித அடிப்படை உரிமையைத்தரமறுத்தபோது அமெரிக்கா அதைக் கண்டித்திருக்கிறது. உலகநட்புபெருகவும், உலக அமைதி ஏற்படவும் அதிக அளவில் பலநாட்டு மக்களும் கலந்து உறவாட வேண்டுமென்ற கொள்கையை அமெரிக்கா அடிக்கடி உபதேசித்து வந்திருக்கிறது.

"இதனுல், இன்றைய அகில உலக வாழ்க்கைச் சூழ்நிலைகளால் ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் பாஸ்போர்ட் பெற அரசியல் சட்டபடி உரிமை உண்டு. இந்த உரிமையைப் பாதுகாப்பது தேசியக்கொள்கையின் அவசரமான காரியம் மட்டுமல்ல; மனித உரிமையின் மகத்துவத்தை நிலைநாட்ட வேண்டிய கடமையுங் கூட!"

அரசாங்கத் தலையீடின்றி வெளிநாடுகளுக்குச் செல்வது மனித உரிமையின் இன்றியமையாத தேவை என்பதை கட்டுரையாளர் எத்தனை அழகாக எடுத்துரைக்கிறுர்! எத்தனை உரைத்தால்தான் என்ன? சர்வாதிகார வெறி கருத்தையன்றே செவிடாக்கி விடுகிறது!

அமெரிக்கப் பாடகர் பால் ராப்சனுக்கு பாஸ்போர்ட் தர மறுத்ததை எதிர்த்து பண்டித நேரு பெருமகனுர் எத்தனை உணர்ச்சிப் பெருக்கோடு பேசினுர்! ஆனுல் அவரது அற்புதமான இந்த ஆட்சியிலேதான் நமது தோழர்கள் மதியழகன், வில்லாளன் இருவருக்கும் இலங்கை செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது! வேடிக்கையாக இல்லையா இது? வெட்கமாகக் கூடத்தான் இருக்கிறது!

பால் ராப்சனது பாடல்களிலே நீக்ரோ மக்களின் உரிமை முழக்கம் நெளிந்தோடுகிறது—நிற வெறி பிடித்த வெள்ளைத் தோலினரின் திரை மறைவுத் தில்லுமல்லுகள் வெட்ட வெளிச்சமாக்கப்படுகின்றன.

ஆகவேதான் அவரது குரலை ஒடுக்க-உலகத்தின் வேறு எந்த மூலையிலும் ஒலிக்க விடாது தடுக்க—அமெரிக்கா விரும்புகிறது. அவரை வெளியே அனுப்ப மறுக்கிறது!

அதைப்போல நமது இயக்கத்தின் முன்னணி வீரர்களான மதியழகன், வில்லாளன் ஆகியோரது பேச்சிலே அழகு தமிழ் மட்டுமல்ல; நம்மை ஆளவந்தாரின் அவல தர்பார் கண்டிக்கப்படுகிறது! 'பாருங்கள் உலகத்தோரே! கூறுங்கள், அடுக்குமா இந்த அக்கிரமம்?' என்ற வினுக்குறி எழுப்பப்படுகிறது.

ஆகவேதான் அவர்களது குரலை ஒடுக்க—உலகத்தின் வேறு எந்த மூலையிலும் ஒலிக்க விடாது தடுக்க—நேரு சர்க்கார் விரும்புகிறது. அவர்களை வெளியே அனுப்ப மறுக்கிறது!

ஆனுலும், பேச்சுரிமை வழங்குவதாக எழுப்புகின்ற அவர்களது உரத்த குரலிலே எள்ளளவு குறையும் இல்லை!

ஜனநாயகமாம், சுதந்திரமாம், ஜீவாதார உரிமைகளாம்! ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல் மேதாவிகள் தொண்டை கிழிய முழங்குகிறுர்கள்.

எங்கே அந்த ஜனநாயகம் ?

எங்கே அந்த ஜீவதார உரிமைகள்?

எல்லாம் இந்த ஏதேச்சாதிகார அரசாங்கத்தின் சர்வாதிகார வெறியில் வெந்து கொண்டிருக்கின்றன!

சுதந்திரம் உரிமை என்றெல்லாம் திறந்த உள்ளத்தோடு பேசுபவர்களே ஜனநாயகம் இந்த மண்ணில் வளர வேண்டுமென்று உண்மையாகவே அக்கரை செலுத்துபவர்களே! சற்றே உங்கள் சிந்தனையை இந்தப் பிரச்சினையில் செலவிடுங்கள்! நாடு சர்வாதிகாரத்தின் வேட்டைக் காடாகிவிடு முன்னர் நல்ல முடிவு காண வழி செய்யுங்கள்!

'காற்றே, வீசாதே! குயிலே கூவாதே!'-என்று தடை விதித்தானும் கதையொன்றிலேவரும் கான்யூட் மன்னனின் பரம்பரையைச் சேர்ந்தவன். அவனுக்கும் டில்லி தர்பாரின் விந்தை மனிதர்களுக்கும் வித்தியாசம் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை!

தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

வளம் காண வழி

அறிஞர் அண்ணுவின்

அரிய கருத்துரை

★

[சென்னை சட்டமன்றத்தில், 1958-59-ம் ஆண்டின் வரவு-செலவு பொது விவாதத்தின்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.]

இந்நூல்...

அரசியல் துறையினருக்கு அரிய விளக்கம் தரும் அறிவுக் களஞ்சியம்!

கோள்கை விளக்கப் பணியில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய பெருந்துணைக் கருவி!!

விலை 8 அணு

குறிப்பு: தனிப் பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன் 15 புதுக்காசுகள் அஞ்சல் செலவிற்காக அனுப்பவும். 50 பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோருக்கு 20 சதவிகிதம் கழிவு உண்டு. வி. பி. பி. இல்லை. தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

விவரங்களுக்கு:—

தி. மு. க. தலைமை நிலையம்—'அறிவகம்'—சென்னை — 13.

உலகம் எழுதிய ஒருமாதக் டைரி

தூரக் கிழக்கிலே துப்பாக்கி சப்தம்!

சமீப காலத்திய என்னுடைய டைரியின் பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்க்கிற நேரத்தில் என் கரங்கள் ஏனோ நடுங்குகின்றன.

அதிலே அநேக இடங்களிலே 'அபாய அறிவிப்பு'கள் காணப்படுகின்றன!

உலகத்தின் அமைதிக்கு மாபெரும் ஆபத்து; உலக யுத்தம் மூண்டுவிடுமோ—அணு அணுவாக வளர்ந்த பல துறை வளர்ச்சிகள் அத்தனையும் அணுகுண்டுகளுக்கு உணவாகிவிடுமோ என்ற திகில்; அதனால் என் உருவமே உருக்குலைந்து போய் விடுமோ என்ற பயம்—இவைதான் அந்த அபாய அறிவிப்புகள்!

நேரம் பார்த்து காத்துக் கிடக்கின்றன, இரண்டு எட்டிக்குப் போட்டி வல்லரசுகள்!

எங்கே சிறு வெடிப்பு கிடைக்கும்; அதை பயங்கரப் பிளவாக மாற்றிவிடலாம் என்று அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றன, அவைகளின் கண்கள்! ஆயுதக் கிடங்குகளிலே எண்களிட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற அணுகுண்டுகளும், ஜலவாயுக் குண்டுகளும் 'துருப்பிடித்து' விடக் கூடாதே என்ற பெரும் கவலை வேறு!

அந்த மாபெரும் பிரளயத்தை அறைகூவி அழைப்பதுபோல அநேக சம்பவங்கள் வேறு குறுக்கிட்டு விட்டன!

கொரியா—அந்தக் கொடுமைக்கு வித்திட்ட பூமி என்ற கண்டனக் கணையிலிருந்து தப்பியது!

அப்புறம் மத்தியக் கிழக்கு—தங்கள் பலத்தைப் பரிசோதித்துக் கொள்ள அமெரிக்காவும் ரஷ்யாவும் அப்பாவி அரபு நாடுகளைத் தேர்ந்தெடுத்து, படைகளைக் குவித்தன போட்டி போட்டுக் கொண்டு! அங்கே ஏற்பட்ட சலசலப்பு பெரும் புயலாக மாறுமோ—உலக அழிவுக்கு ஆலவட்டம் சுற்றிவிடுமோ என்று சமாதானப் பிரியர்கள் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தனர்!

ஆனால், அங்கே எழும்பிக் கொண்டிருந்த துப்பாக்கி வெடி சப்தங்கள் இப்போதுதான் அடங்கின! மத்திய கிழக்கு நெருக்கடி ஒருவாறாக முடிவுற்றதே என்று பெருமூச்சு விடுமுன்—மறுபடியும் திடீரென்று குண்டுகள் வெடிக்கும் சப்தம் எழும்புகிறது, இப்போது!

தூரக் கிழக்கிலிருந்துதான் அந்தத் துடிக்கச் செய்யும் செய்தி கிடைத்திருக்கிறது!

நவசீனாவின் மின்வேக வளர்ச்சியைக் கண்டு மனம் பொறுக்காத ஒரே ஒரு நபர் இந்த உலகத்தில் இருந்தார் என்றால், அவர் சியாங் கே ஷேக்தான்! அவர் புரட்சிக்கு முந்தைய சீனாவின் தலைவர். கோமிண்டாங் — அதாவது சீன தேசியக் கட்சியின் தலைவர். கம்யூனிஸ்ட் சீனாவிலிருந்து துரத்தப்பட்டவர்!

அவர்தான் பக்கத்திலிருக்கும் பார்மோசாவில் உட்கார்ந்து கொண்டு, அமெரிக்க சிப்பாய்களைப் பக்கத்திலேயே நிறுத்திக் கொண்டு, 'விட்டேனா, பார்!' என்று செஞ்சீனத்தை நோக்கி உறுமிக் கொண்டிருந்தார், இத்தனை காலம்!

அவரது ஆளுகைக்குட்பட்ட குமாய்த் தீவுகள்மீது இப்போது கம்யூனிஸ்ட் சீனாவின் கடற்படை தாக்குதல் நடத்திற்று. கோமிண்டாங் படைகளும் திரும்பித் தாக்கின!

இந்தத் தாக்குதல் இப்படியே நின்று விட்டால்தான் பரவாயில்லையே!

"தூரக் கிழக்கில் உள்ள அமெரிக்காவின் கடற்படைகள் அனைத்தும் உஷாராகி விட்டன! பார்மோசாவைத் தாங்கி நிற்கும் ஏழாவது கடற்படை மட்டுமல்ல; ஜப்பான், பிலிப்பைன் கடலோரங்களிலுமுள்ள அமெரிக்கக் கடற்படைகளும் தயாராகிவிட்டன!"

—என்கிறார் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் டல்லஸ்!

"ஓரத் தீவுகள் மக்கள் சீனத்திற்கு உரிமையானவை. ஆகவே, அமெரிக்காவே! நெருப்புடன் விளையாடாதே! உன் கொள்கைகள் கண்டிக்கத்தக்கவை! கவனம், கவனம்!"

—என்று பதிலுக்கு முழங்குகிறது மாஸ்கோ வானொலி!

இந்த இரண்டுப் பேரிடிகளுக்கிடையே உலக மக்கள் எழுப்புகின்ற அபயக் குரல் யார் காதில் விழப்போகிறது?

•

பதினோராண்டு கால தீராத தலைவலி!

இந்த தீர்வில்லாத தலைவலிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கட்ட உலகத்திலே ஒரு பெரிய 'சமாதானப் புறாக்கள் உற்பத்திசாலை'யை இந்தியாவில் (வட இந்தியாவில்தான்) ஆரம்பித்துவிட்டால் என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம் பண்டித நேரு பெருமான்!

உலகச் சந்தையிலே அவரது "பஞ்சசீல"த்திற்கு போதிய கிராக்கி இல்லை! ஏன்; உள்நாட்டுக் கடையிலே கூட அந்தப் பெருமைக்குரிய பஞ்சசீலம் பஞ்சு பஞ்சாகப் பிய்த்தெறியப்படுகிறது, துப்பாக்கி முனையிலே!

சென்னைத் துறைமுகத்துக்கு முன்னாலேயும், ஆமதாபாத் அமளியின்போதும் பஞ்சசீலம் பேசவில்லையே! துப்பாக்கிக் குண்டுகள்தானே பேசின! சுருண்டு விழுந்த பேசாத பிணங்கள் எல்லாமே பண்டிதர் ஆட்சியின் பெருமையைக் கதை கதையாகச் சொல்லினவே!

துப்பாக்கிக்குண்டுகள் இந்தியா-பாகிஸ்தான் எல்லையிலேயே அப்போதைக்கப்போது திடீரென்று வெடித்துக் கொண்டுதான் இருக்கின்றன. அதற்குக் காரணம் என்றுமே தீராத எல்லைப் பிரச்சினை! இந்தத் தீராத நோய்க்கு - ஆறாத புண்ணுக்கு எப்படியும் மருந்து கண்டு விடத்தான் வேண்டும் என்று தீவிரமுடிவுக்கு வந்து விட்டார் நேரு!

பாக்கிஸ்தான் பிரதமர் நூன் டெல்லிக்கு வருகிறார், அடுத்த கிழமை அதுபற்றிப் பேச! என்ன ஆகுமோ; ஏதாகுமோ; அல்லது ராஜபவன் விருந்தோடுமுடிந்துவிடுமோ; என்னவோ! யார் கண்டது? அது ஆசிய ஜோதிக்குத்தான் வெளிச்சம்!

ஏனென்றால் இது இன்று நேற்று பிரச்சினையோ—ஓராண்டு ஈராண்டு பிரச்சினையோ அல்லவே!

பதினோரு ஆண்டு காலமாக—சுதந்திரம் கிடைத்ததிலிருந்து இரு நாடுகளுக்கிடையே இருந்துவரும் தலைவலி அல்லவா?

இந்த லட்சணத்தில்தான் சென்னை வட்டாரத்திலேயிருக்கிற காங்கிரஸ் புலிகள் கேட்கிறார்களாம், "திராவிட நாடு கேட்கிறார்களே, குறுகிய புத்தி படைத்தவர்கள்; அதன் எல்லை என்ன? அதை வரையறுத்து அடி அங்குல சுத்தமாகச் சொல்ல முடியுமா?" என்று!

எப்படி இருக்கிறது இந்த வேடிக்கை? அபாயம் நெருங்கி விடுமோ என்ற அச்சத்தினிடையேயும் வயிறு குலுங்கச் சிரிக்கிறேன் நான், இந்த வேடிக்கையை நினைத்து!

யானை சிங்கம் சுருட்டுகள்
TRADE MARK

T.V.முத்துகிருஷ்ணன்
திருச்சி 2

எமது ஏழாவது வெளியீடு!

வீரத்தாலும் விவேகத்தாலும் வீழ்த்த முடியாத செயல் வீரனை வீணர்கள் சதியால் சாகடித்தனர்! அதன் எதிரொலி...நீதி சதியை சாகடித்தது! இத்தகைய அரும்பெரும் வீர உணர்ச்சிகளைக் கொண்ட சிறந்த வரலாற்று நூல்!

சிந்தனைச் சிற்பி

சி. பி. சிற்றரசு அவர்களின்

"ரோம் நாட்டு வீரன்"

விலை ரூ. 1—50

எழுதுங்கள்:

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை சாலை, — திருச்சிராப்பள்ளி—8.

குறிப்பு:— தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் தபால் செலவிற்கென 25 புதிய காசுகள் மணியார்டர் அனுப்புக.

'அன்னை'

(மாதம் ஒருமுறை)

தாய்க்குலத்தைத், தரணியின்
திருவிளக்கை பெருமதிப்பை
பேய்க்குலமென்றிழிப் பார்க்குப்
பண்தருவாள்; கண்தருவாள்.

செப்டம்பர் திங்களில்

வெளிவருகிறாள்.

தனி இதழ்: 20 காசு. ஆண்டு சந்தா: ரூ. 2—50

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

பொறுப்பாளர்:
'அன்னை'
179, போர்ச்சுகீஸ்சர்ச் தெரு.
சென்னை—1.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.